AL/67/T/16

முழுப் பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

இலங்கை பரீட்சைத் திணைக்களம்

க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை – 2024

67 - தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்

புள்ளியிடும் திட்டம்

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன.

இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக் கொள்ளப்படும் கருத்துக்களுக்கேற்ப இதில் உள்ள சில விடயங்கள் மாற்றப்படலாம்.

CamScanner

க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2024

67 - தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்

புள்ளி வழங்கும் திட்டம்

பத்திரம் I : 1 x 50 புள்ளிகள்

பத்திரம் II :

பகுதி A	100 x 4	=	400 புள்ளிகள்
பகுதி B	150 x 2	=	300 புள்ளிகள்
பகுதி C	150 x 2	=	300 புள்ளிகள்
பகுதி D	150 x 2	=	300 புள்ளிகள்
மொத்தப் புள்ளிகள்		=	400 + 600 புள்ளிகள்

பத்திரம் II இற்குரிய இறுதிப் புள்ளிகள் $= 1000 \div 20$

$= 50$ புள்ளிகள்

புள்ளிப் பட்டியலில் புள்ளிகளைப் பதிவு செய்யும் முறை

பத்திரம் I - முழுப் புள்ளி இரண்டு இலக்கத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.

பத்திரம் II - முழுப் புள்ளி 1000 இற்கு குறைவெனின் மூன்று இலக்கத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.

CamScanner

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

තාක්ෂණවේදය සඳහා විද්‍යාව I
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் I
Science for Technology I

67 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

அறிவுறுத்தல்கள் :

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகள் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.
* செய்நிரலாக்கத்தகா (Non- programmable) கணிப்பான்களைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படு

1. பச்சையவுருவத்தின் பிரதான தொழில் யாது?

(1) ஒளித்தொகுப்பு (2) சுவாசம்
(3) புரதத் தொகுப்பு (4) கொழுப்பமிலத் தொகுப்பு
(5) கிளைக்கோப்புரதத் தொகுப்பு

2. வல்லருகுக் கலங்கள் புடைக்கலவிழையக் கலங்களிலிருந்து எங்ஙனம் வேறுபடும்?

(1) பெரிய புன்வெற்றிடங்கள் இருக்கின்றமை.
(2) உணவைச் சேமிப்பதற்காக இசைவாக்கம் அடைந்திருக்கின்றமை.
(3) மிகவும் மெல்லிய கலச் சுவர்கள் இருக்கின்றமை.
(4) உணவைக் கொண்டு செல்கின்றமை.
(5) முதிர்ச்சி அடையும்போது இறந்த கலங்களாக மாறுகின்றமை.

3. புரதங்கள் பற்றிப் பின்வரும் எக்கூற்று சரியானது?

(1) அவை பல்வேறு 25 அமைனோ அமிலங்களினால் ஆக்கப்பட்டுள்ளன.
(2) அவை முதலமைப்புகளாக மாத்திரம் இருக்கின்றன.
(3) அவை பயூரேற்றுச் சோதனையைப் பயன்படுத்தி இனங்காணப்படலாம்.
(4) எல்லாப் புரதங்களிலும் C, H, O, N, S, P ஆகியன அடங்கியுள்ளன.
(5) வெவ்வேறான இரு புரதங்களின் அமைனோ அமிலத் தொடரி சர்வசமனானது.

4. பின்வரும் தாவர ஓமோன்களைக் கருதுக.

A - ஒக்சின்
B - சைரோக்கைனின்
C - அப்சிசிக் அமிலம்
D - கிபெரலின்

மேற்குறித்தவற்றில் எந்த ஓமோன் சோடி தாவர இழைய வளர்ப்பிற் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்

(1) A, B ஆகியன மாத்திரம் (2) A, C ஆகியன மாத்திரம்
(3) B, C ஆகியன மாத்திரம் (4) B, D ஆகியன மாத்திரம்
(5) C, D ஆகியன மாத்திரம்

5. அயனமண்டல மழைக் காடுகள் பற்றிய பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - அவை என்றும் பச்சையானவை.
B - அவை அதியுயர் உயிர்ப்பல்வகைமையைக் கொண்டவை.
C - வெளிப்பாடு, விதானம், கீழ்ப்படை, காட்டுத் தரை ஆகியன அவற்றின் நான்கு பிர படைகளாகும்.

மேற்குறித்தவற்றில் சரியான கூற்று/ கூற்றுகள்

(1) A மாத்திரம் (2) A, B ஆகியன மாத்திரம்
(3) A, C ஆகியன மாத்திரம் (4) B, C ஆகியன மாத்திரம்
(5) A, B, C ஆகிய எல்லாம்

CamScanner

6. NaOH இற்கும் HCl இற்குமிடையே உள்ள நடுநிலையாக்கத் தாக்கத்தின் தாக்க வெப்பம் 55.9 kJ mol^{-1} ஆகும். ஓர் HCl கரைசலைப் பயன்படுத்தி 1.0 mol dm^{-3} NaOH கரைசலின் 50 mL முற்றாக நடுநிலையாக்கப்படும்போது எவ்வளவு வெப்பம் விடுவிக்கப்படும்?

(1) 1.1 kJ mol^{-1} (2) 2.7 kJ mol^{-1} (3) 5.5 kJ mol^{-1}
(4) 11.1 kJ mol^{-1} (5) 55.9 kJ mol^{-1}

7. ஐதரசன் பிணைப்பு

(1) இரு ஐதரசன் அணுக்களுக்கிடையே உள்ள பிணைப்பாகும்.
(2) இரு ஐதரசன் அணுக்களுக்கிடையே உள்ள கவர்ச்சியாகும்.
(3) ஓர் ஐதரசன் அணுவிற்கும் உயர்ந்த அளவில் மின்மறையான ஓர் அணுவிற்குமிடையே உள்ள பிணைப்பாகும்.
(4) ஓர் ஐதரசன் அணுவிற்கும் வேறோர் அணுவிற்குமிடையே உள்ள பிணைப்பு அல்லது கவர்ச்சி ஆகும்.
(5) ஓர் ஐதரசன் அணுவிற்கும் உயர்ந்த அளவில் மின்மறையான ஓர் அணுவிற்குமிடையே உள்ள கவர்ச்சியாகும்.

8. இரசாயனத் தாக்கங்கள் பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

(1) எல்லா இரசாயனத் தாக்கங்களும் பல்படித் தாக்கங்களாகும்.
(2) எல்லா இரசாயனத் தாக்கங்களும் புறவெப்பத் தாக்கங்களாகும்.
(3) தாக்கிகளுக்கிடையே நடைபெறும் ஒவ்வொரு தாக்கமும் விளைபொருள்களை உண்டாக்குகின்றது.
(4) தாக்க வீதம் வெப்பநிலைக்கு நேர்மாறுமுறை விகிதசமமாகும்.
(5) விளைபொருள்களை உண்டாக்குவதற்குத் தாக்கிகளுக்கிடையே உகந்த திசையளியுடன் நடைபெறும் மோதுகைகள் தேவை.

9. கிளைக்கோசிடிக் பிணைப்பு என்பது

(1) இரு அமைனோ அமில மூலக்கூறுகளுக்கிடையே உள்ள பிணைப்பாகும்.
(2) இரு ஐதரோக்காபன் மூலக்கூறுகளுக்கிடையே உள்ள பிணைப்பாகும்.
(3) இரு இலிப்பிட்டு மூலக்கூறுகளுக்கிடையே உள்ள பிணைப்பாகும்.
(4) இரு காபோவைதரேற்று மூலக்கூறுகளுக்கிடையே உள்ள பிணைப்பாகும்.
(5) ஒரு கிளிசரோல் மூலக்கூறுக்கும் ஒரு நீண்ட சங்கிலிக் கொழுப்பமில மூலக்கூறுக்குமிடையே உள்ள பிணைப்பாகும்.

10. பின்வரும் விளைபொருள்களையும் ஒவ்வொரு விளைபொருளுக்கும் எதிரே தரப்பட்டுள்ள புரதத்தையும் கருதுக.

	விளைபொருள்	புரதம்
A	பசுப்பால்	அல்பியூமின்
B	கோதுமை மா	கேசீன்
C	ஜெலற்றின்	கொலாஜென்

மேற்குறித்த அட்டவணையில் விளைபொருளும் விளைபொருளில் இருக்கும் பிரதான புரதமும் சரியாகக் காட்டப்பட்டிருப்பது

(1) A இல் மாத்திரம் ஆகும். (2) B இல் மாத்திரம் ஆகும்.
(3) C இல் மாத்திரம் ஆகும். (4) A, B ஆகியவற்றில் மாத்திரம் ஆகும்.
(5) B, C ஆகியவற்றில் மாத்திரம் ஆகும்.

11. மாநகரசபை நீர்ப் பரிகரிப்புச் செயன்முறை பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?

(1) கரைந்திருக்கும் துர்நாற்றமுள்ள வாயுக்களை அகற்றுவதற்குப் புறமாற்றுப் பிரசாரணம் பயன்படுத்தப்படுகின்றது.
(2) நச்சுச் சேதனப் பதார்த்தங்களை அகற்றுவதற்குக் கழியூதாக் கதிர்கள் பயன்படுத்தப்படுகின்றன.
(3) நீரில் உள்ள நோய்விளைவிக்கும் நுண்ணங்கியை அழிப்பதற்குச் சுழலும் உருளை முறை பயன்படுத்தப்படுகின்றது.
(4) அயன்களையும் நச்சுச் சேதனப் பதார்த்தங்களையும் அகற்றுவதற்குத் தெரிந்தெடுத்த நுண்ணங்கிகள் பயன்படுத்தப்படுகின்றன.
(5) பற்றீரியாவைப் பயன்படுத்திச் சேதனப் பதார்த்தங்களைப் பிரிகையடையச் செய்வதற்குச் சொட்டும் வடிகட்டிமுறை பயன்படுத்தப்படுகின்றது.

12. வளிமண்டல மாசாக்கிகள் பற்றிய சரியான கூற்று யாது?

(1) CO அமில மழையை உண்டாக்குகின்றது.
(2) NO பூகோள வெப்பத்திற்குப் பங்களிப்புச் செய்கின்றது.
(3) SO_x ஓசோன் படையை அழிக்கின்றது.
(4) ஒளியிரசாயனப் புகார் உண்டாவதற்கு SO_x பங்களிப்புச் செய்கின்றது.
(5) CFC பூகோள வெப்பத்திற்குப் பங்களிப்புச் செய்கின்றது.

CamScanner

13. மண், வளி மாசடைதல் என்பன பற்றிய பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - NO_x, SO_x போன்ற வளி மாசாக்கிகள் மண்ணின் உவர்த்தன்மைக்குப் பங்களிப்புச் செய்கின்
B - விவசாயத்திற்காகக் குளத்தின் நீரைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தலின் விளைவாக மண்ண உவர்த்தன்மை அதிகரிக்கலாம்.
C - CFC விடுவிக்கப்படுவதனால் தரை மட்டத்தில் ஓசோன் உற்பத்தி குறைகின்றது.

மேற்குறித்தவற்றில் சரியான கூற்று/ கூற்றுகள்
(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) A, B ஆகியன மாத்திரம் (5) A, B, C ஆகிய எல்லாம்

14. பின்வரும் எது ஓர் இயற்கைச் செயன்முறையுடன் தொடர்புபட்ட ஒரு மாற்றல் **அன்று**?
(1) நைதரசனகற்றல் மூலம் N_2 வாயு NH_3 வாயுவாக மாற்றப்படுகின்றது.
(2) நுண்ணங்கி நைத்திரேற்றாக்கம் NH_4^+ அயன்களை NO_3^- அயன்களாக மாற்றுகின்றது.
(3) கடல் நீரில் கரைந்திருக்கும் CO_2 காபனேற்றுகளாக அடைகின்றது.
(4) ஒளித்தொகுப்பின் மூலம் H_2O உம் CO_2 உம் குளுக்கோசாக மாற்றப்படுகின்றன.
(5) அமில மழையின் மூலம் சுண்ணாம்புக்கல் CO_2 வாயுவாகவும் கல்சியம் அயன்களாக மாற்றப்படுகின்றது.

15. இரசாயனக் கைத்தொழிற் செயன்முறை பற்றிய சரியான கூற்று யாது?
(1) புதுப்பிக்கத்தக்க மூலப்பொருள்களைப் பயன்படுத்தல் ஒரு நெடுங்கால அனுகூலமாக இருக்கலாம்
(2) மூலப்பொருள்களைக் கலப்பதற்கான ஒரு குறித்த விகிதம் இல்லை.
(3) ஓர் உயர் புறவெப்பச் செயன்முறையின் மூலப்பொருள்களை அதிக அளவுகளிற் கலக்கலாம்.
(4) 5S முறை 5 செக்கன்களில் ஒரு செயன்முறை நிறைவடைவதற்கு இடமளிக்கின்றது.
(5) பொதுவாக இராத, பெறுவதற்குக் கடினமான மூலப்பொருள்களைக் கைத்தொழில்களுக்குப் பயன்படு வேண்டும்.

16. சவர்க்காரம் என்பது
(1) பல்வேறு நீண்ட சங்கிலி ஐதரோக்காபன்களின் ஒரு கலவையாகும்.
(2) எசுத்தர்களுக்கும் NaOH இற்குமிடையே உள்ள சவர்க்காரமாக்கலின் ஒரு விளைபொருளாகும்.
(3) திண்ம நீண்ட சங்கிலி எசுத்தர்களின் ஒரு கலவையாகும்.
(4) நீண்ட சங்கிலி ஐதரோக்காபன்கள், NaOH, கிளிசரின் ஆகியவற்றின் ஒரு கலவையாகும்.
(5) உயிரெதனோல் உற்பத்திச் செயன்முறையின் ஒரு பிரதான விளைபொருளாகும்.

17. கடதாசி உற்பத்திச் செயன்முறையில்
(1) களிமண் ஒரு நிரப்பியாகப் பயன்படுத்தப்படுகின்றது.
(2) மாப்பொருள் ஒரு மென்மையாக்கியாகப் பயன்படுத்தப்படுகின்றது.
(3) தைத்தேனியம் ஈரொட்சைட்டு ஒரு கட்டியாகப் (binder) பயன்படுத்தப்படுகின்றது.
(4) இலிக்னின் தனித்தன்மை வாய்ந்த வெண்ணிறத்தை உண்டாக்குகின்றது.
(5) NaOH ஐப் பயன்படுத்திச் செலுலோசு ஒரு கழிவுப் பொருளாக அகற்றப்படுகின்றது.

18. ஒரு சதுரக் கடதாசி அதன் ஒரு பக்கம் வழியே உருட்டப்படுவதன் மூலம் ஓர் உருளையாக, எதி பக்கம் மேற்படியாமல் மட்டுமட்டாகத் தொடுமாறு, செய்யப்படுகின்றது. உருளையின் அடி ஆரைக் உயரத்திற்குமிடையே உள்ள விகிதம் யாது?
(1) $1:2\pi$ (2) $\sqrt{2}:\pi$ (3) $1:\sqrt{2}\pi$ (4) $1:\pi$ (5) $2\pi:1$

19. கூம்பு வடிவத்தில் குவிக்கப்பட்டுள்ள ஒரு நெற் குவியலின் விட்டம், உயரம் ஆகியன முறையே 8 m, 3 ஆகும். இந்நெற்குவியலை மழை படாமற் பாதுகாப்பதற்கு ஓர் இரட்டினால் (canvas) மூடவேண்டியுள்ள இதற்குத் தேவைப்படும் இரட்டின் குறைந்தபட்சப் பரப்பளவு m^2 இல் யாது?
(1) 12π (2) 20π (3) 24π (4) 40π (5) 42π

20. சந்திரனின் விட்டம் புவியின் விட்டத்தின் அண்ணளவாகக் கால்வாசியாகும். இதற்கேற்பப் புவியின் மேற்பரப் பரப்பளவு சந்திரனின் மேற்பரப்பின் பரப்பளவின் எத்தனை மடங்காகும்?
(1) 2 (2) 4 (3) 8 (4) 16 (5) 32

21. $8\text{ cm} \times 15\text{ cm}$ செவ்வக வடிவமுள்ள கம்பியினாற் செய்யப்பட்டுள்ள ஓர் ஒளிப்படச் சட்டத்தின் மூலைவிட்டத்தின் வழியே ஒரு மேலதிகக் கம்பி உள்ளது. மூலைவிட்டப் பகுதி உட்படச் சட்டத்தில் உ கம்பியின் மொத்த நீளம் யாது?
(1) 46 cm (2) 54 cm (3) 61 cm (4) 63 cm (5) 80 cm

CamScanner

● 22, 23 ஆகிய வினாக்கள் ஒரு பல்கனியின் கிடைப்படத்தைக் காட்டும் பின்வரும் வரிப்படத்தை அடிப்படையாகக் கொண்டவை. இப்பல்கனி மையம் A ஐயும் ஆரை 6 m ஐயும் உடைய ஒரு வட்டத்தின் ஓர் ஆரைச்சிறையின் வடிவமுள்ளது.



22. BC இன் நீளம் $6\sqrt{3}$ m எனத் தரப்பட்டுள்ளது. கோணம் $B\hat{A}C$ இன் பெறுமானம் யாது?

(1) $\frac{\pi}{6}$ (2) $\frac{\pi}{3}$ (3) $\frac{\pi}{2}$ (4) $\frac{2\pi}{3}$ (5) $\frac{3\pi}{2}$

23. பல்கனியின் பரப்பளவு m^2 இல் யாது?

(1) 4π (2) 6π (3) 8π (4) 12π (5) 24π

24. உதைபந்தாட்டப் பயிற்சியாளர் ஒருவர் அடுத்த போட்டியின் திட்டப்படத்திற்குத் தனது குழு தானப்படுத்தப்பட வேண்டிய விதத்தை ஓர் ஆள்கூற்று நெய்யரியில் குறிக்கின்றார். அவர் விளையாட்டு வீரர் A ஐ $(1, 3)$ எனத் தானப்படுத்துகின்றார். விளையாட்டு வீரர் A ஆனவர் $(-6, 2)$ இல் உள்ள விளையாட்டு வீரர் B இற்குப் பந்தைப் பணிப்பார். விளையாட்டு வீரர் A அப்பந்தை நேரடியாகத் தரை வழியே விளையாட்டு வீரர் B இற்கு அடித்தால், பந்து செல்லும் தூரம் ஆள்கூற்றுத் தொகுதியின் அலகுகளில் யாது?

(1) $2\sqrt{2}$ (2) $\sqrt{26}$ (3) 7 (4) 8 (5) $5\sqrt{2}$

25. கடலில் நிலையாக உள்ள இரு கப்பல்களின் ஆள்கூறுகள் வரிப்படத்திற் காட்டப்பட்டுள்ளன. ஒரு படகு கப்பல்களைத் தொடுக்கும் கோட்டின் நடுப் புள்ளியினூடாக அக்கோட்டிற்குச் செங்குத்தாகச் செல்கின்றது. படகின் பாதையின் சமன்பாடு யாது?

(1) $y = -\frac{4}{3}x + \frac{11}{3}$

(2) $y = \frac{3}{4}x + \frac{11}{3}$

(3) $y = -\frac{3}{4}x + \frac{5}{2}$

(4) $y = -\frac{4}{3}x + \frac{8}{3}$

(5) $y = \frac{4}{3}x + \frac{11}{3}$



26. ஒரு சிறிய வியாபாரத்தின் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுக்கான மாத விற்பனைகள் (ரூ. 1000 இல்) $-45, 12, -7, -15, 15, 3, -22, 35$ ஆகும். இங்கு மறைப் பெறுமானங்களின் மூலம் நட்டம் காட்டப்படுகின்றது. மேற்குறித்த பெறுமானங்களின் இடையம் யாது?

(1) -15 (2) -2 (3) 0 (4) 2 (5) 15

27. பத்துச் செயற்றிட்டங்களின் இடைப் பாதீடு ரூபா 150,000 ஆகும். இரு செயற்றிட்டங்களின் நோக்கங்கள் வேறுபடுகின்றமையால், ரூபா 180 000, 140 000 ஆன இரு செயற்றிட்டங்களின் மதிப்பிட்ட தொகைகள் முறையே ரூபா 200 000, 120 000 என மாற்றப்பட்டன. இரு பாதீடுகளையும் திருத்திய பின்னர் புதிய இடை ரூபாய்களில் எவ்வளவு?

(1) 120 000 (2) 130 000 (3) 140 000 (4) 150 000 (5) 160 000

28. ஒரு ரபிளெற் (Tablet) கணினியின் அளவைக் கருதும்போது அதில் அடங்கத்தக்க அழிவுறாத் தேக்ககமாகப் (non volatile storage) பின்வரும் எது இருக்கலாம்?

(1) Blu-ray இயக்கி
(2) வன்வட்டு இயக்கி
(3) CD-ROM இயக்கி
(4) பாதுகாப்பான இலக்க நினைவக (Secure Digital Memory) அட்டை
(5) தற்போக்குப் பெறுவழி நினைவக அட்டை (முதன்மை நினைவகம்)

CamScanner

29. முதன்மை நினைவகம் தொடர்பாக ஒரு பணிசெயல் முறைமையின் முக்கிய தொழில் யாது?
(1) வலையமைப்புத் தொடுப்புகளை முகாமித்தல்
(2) உள்ளீட்டுச் சாதனங்களையும் வெளியீட்டுச் சாதனங்களையும் கட்டுப்படுத்தல்
(3) நினைவகத்தைச் செயன்முறைகளுக்கு ஒதுக்குதலும் விடுவித்தலும்
(4) வன் வட்டின் பௌதிகத் தேக்ககத்தை முகாமித்தல்
(5) இடைத்தாக்கங்களுக்கு ஒரு வரைவியற் பயனர் இடைமுகத்தை வழங்குதல்

30. Linux பணிசெயல் முறைமையில் **ps-A** கட்டளை பயன்படுத்தப்படுவது
(1) புதிய முறைவழிகளை உருவாக்குவதற்கு
(2) முறைவழிகளின் முன்னடைவை அமைப்பதற்கு
(3) முறைமைச் சேவைகளை மீளத்தொடக்குவதற்கு
(4) முறைவழிகளின் முன்னடைவை மாற்றியமைப்பதற்கு
(5) எல்லா உயிர்ப்பான ஓட்ட முறைவழிகளையும் பட்டியற்படுத்தல்

31. ஓர் இலவச மற்றும் திறந்த மூல மென்பொருள் (free and open source software) தொடர்பாக மாண
ஒருவன் குறிப்பிட்ட பின்வரும் இயல்புகளைக் கருதுக.
A - பயனர்கள் உருவாக்குபவருக்குப் பணத்தைச் செலுத்த வேண்டும்.
B - அது கட்டணமின்றிப் படியிறக்கம் செய்யப்படலாம்.
C - நிறுவற் கோப்பினைப் (installation file) பகிர்ந்து கொள்ளல் சட்டவிரோதமானது.

மேற்குறித்தவற்றில் ஓர் இலவச மற்றும் திறந்த மூல மென்பொருள் பற்றிய சரியான இயல்பு யா
இயல்புகள் யாவை?
(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) A, B ஆகியன மாத்திரம் (5) A, C ஆகியன மாத்திரம்

32. மாணவன் ஒருவன் முதலாவது பெட்டியில் தரப்பட்டுள்ள வாக்கியத்தை இரண்டாவது பெட்டியில் உள்
வாக்கியமாகப் பதிப்பிப்பதற்கு எதிர்பார்க்கின்றான்.
முதலாவது பெட்டி

many natural Saccharomyces species are used to produce CH3CH2OH.

இரண்டாவது பெட்டி

Many natural *Saccharomyces* species are used to produce CH_3CH_2OH.



மேலே 1 தொடக்கம் 6 வரைக்கும் காட்டப்பட்டுள்ள கருவிகளுள் தொடக்க வாக்கியத்தைப் பதிப்பிப்பதற்
தேவையான கருவிகள் யாவை?
(1) 1, 2, 3 ஆகியன மாத்திரம் (2) 1, 2, 4 ஆகியன மாத்திரம்
(3) 2, 3, 4 ஆகியன மாத்திரம் (4) 2, 4, 5 ஆகியன மாத்திரம்
(5) 3, 4, 5, 6 ஆகியன மாத்திரம்

33. ஒரு விரிதாள் மென்பொருளில் NOW() சார்பு
(1) நடைமுறைத் திகதியை மாத்திரம் வழங்குகின்றது.
(2) நடைமுறை நேரத்தை மாத்திரம் வழங்குகின்றது.
(3) நடைமுறை மாதத்தை மாத்திரம் வழங்குகின்றது.
(4) நடைமுறை திகதியையும் நேரத்தையும் மாத்திரம் வழங்குகின்றது.
(5) வாரத்தின் நடைமுறை நாளை மாத்திரம் வழங்குகின்றது.

34. பின்வரும் எது ஒரு செல்லுபடியான IPv4 முகவரியாகும்?
(1) 192.168.1.256 (2) 255.255.255.255 (3) 10.0.0.256
(4) 172.16.1.1 (5) 192.168.0.0.1

35. மின்னஞ்சற் கணக்கின் விரும்பாக் கோப்புறை (Spam folder) பற்றிய பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - விரும்பாக் கோப்புறையில் உள்ள மின்னஞ்சல்களை (email) அனுப்பமுடியாது.

B - அது வரும் அஞ்சற் கோப்புறையை (Inbox folder) வேண்டப்படாத (unsolicited) மின்னஞ்சல்களிலிருந்து சுதந்திரமாக வைத்துக் கொள்வதற்கு உதவுகின்றது.

C - விரும்பாக் கோப்புறையில் உள்ள மின்னஞ்சல்களை வரும் அஞ்சற் கோப்புறைக்கு மாற்ற முடியாது.

மேற்குறித்தவற்றில் சரியான கூற்று/ கூற்றுகள்

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) C மாத்திரம்
(4) A, B ஆகியன மாத்திரம் (5) B, C ஆகியன மாத்திரம்

36. மின்னஞ்சல்களை அனுப்புவதற்கு Bcc முறை பயன்படுத்தப்படும்போது

(1) மின்னஞ்சல் 10 பெறுநர்களுக்கு மாத்திரம் அனுப்பப்படலாம்.
(2) பெறுநர்கள் பெறுநர் பட்டியலைப் பார்க்க முடியாது.
(3) அது ஏனையோருக்கு அனுப்பப்பட (forward) முடியாது.
(4) கோப்பு இணைப்பு (attachment) அனுமதிக்கப்படுவதில்லை.
(5) பெறுநர்கள் அனுப்புநரின் மின்னஞ்சல் முகவரியைப் பார்க்க முடியாது.

37. ஒரு விரிதாளில் உள்ள fill-handle கருவியைப் பயன்படுத்திக் கலம் C2 இல் உள்ள சூத்திரம் =A2*D7 கலம் C5 இற்கு நகல் செய்யப்படுமெனின், C5 இல் உள்ள சூத்திரம் யாதாக இருக்கும்?

C2 =A2*D7

	A	B	C	D
1	Paper ONE	Paper TWO	From paper ONE	From paper TWO
2	45	18	4.5	
3	35	40		
4	42	32		
5	26	40		
6				
7			Fraction from paper ONE	0.1
8			Fraction from paper TWO	0.2

(1) =A5*C7 (2) =A2*D7 (3) =A2*D8 (4) =A5*D7 (5) =A5*D8

38. விசையின் அலகு யாது?

(1) $kg\ m^{-1}\ s^{-1}$ (2) $kg\ m\ s^{-1}$ (3) $kg\ m\ s^{-2}$ (4) $kg\ m^2\ s^{-1}$ (5) $kg\ m^2\ s^{-2}$

39. உண்மையான வெப்பநிலை 0 °C ஆக இருக்கும்போது ஒரு வெப்பமானி அதனை –3 °C எனக் காட்டுகின்றது. அவ்வெப்பமானியின் ஒரு வாசிப்பு வரிப்படத்திற் காட்டப்பட்டுள்ளது. அவ்வெப்பமானியின் பின்ன வழுவும் உண்மையான வெப்பநிலையும் முறையே யாவை?

(1) $\frac{1}{27}$, 21°C
(2) $\frac{3}{24}$, 21°C
(3) $\frac{1}{21}$, 27°C
(4) $\frac{3}{24}$, 27°C
(5) $\frac{1}{27}$, 27°C



40. 5 kg திணிவுள்ள ஓர் உருக்குக் குற்றியில் ஒரு வளி நிரப்பிய வெற்றிடம் உள்ளது. அது நீரில் முழுமையாக அமிழ்த்தப்படும்போது 550 mL நீர் இடம்பெயர்கின்றது. வெற்றிடத்தின் கனவளவு யாது? (உருக்கினதும் நீரினதும் அடர்த்திகள் முறையே 8 $g\ mL^{-1}$, 1 $g\ mL^{-1}$ ஆகும்.)

(1) 32 mL (2) 40 mL (3) 50 mL (4) 75 mL (5) 150 mL

41. கிடையுடன் 30° இற் சாய்ந்துள்ள ஓர் ஒப்பமான புகையிரதப் பாதையில் ஓய்வில் இருக்கும் ஒரு துரலி விடுவிக்கப்படுகின்றது. அது அப்பாதையில் கீழ்நோக்கி 62.5 m தூரம் சென்ற பின்னர் அதன் கதி யாது? ($g = 10\ m\ s^{-2}$)

(1) $\sqrt{62.5}\ m\ s^{-1}$ (2) $25\ m\ s^{-1}$ (3) $25\sqrt{2}\ m\ s^{-1}$ (4) $50\ m\ s^{-1}$ (5) $50\sqrt{2}\ m\ s^{-1}$

CS CamScanner

42. ஒரு மோட்டர்ச் சைக்கிளின் உந்தம் 50 $kg\,m\,s^{-1}$ இலிருந்து 550 $kg\,m\,s^{-1}$ இற்கு ஒரு மாறா வீதத்தில் 1 இல் மாறுகின்றது. அம்மோட்டர்ச் சைக்கிளின் மீது எவ்வளவு விசை பிரயோகிக்கப்படுகின்றது?

(1) 5.0 N (2) 5.5 N (3) 50 N (4) 55 N (5) 550 N

43. ஒரு பீரங்கியினதும் ஒரு பீரங்கிக் குண்டினதும் திணிவுகள் முறையே 2000 kg, 25 kg ஆகும். சுடப்படும்போ பீரங்கி 5 $m\,s^{-1}$ கதியில் கிடையாகப் பின்நோக்கி இயங்குகின்றது. பீரங்கிக்குண்டின் கிடை வேகம் யாது

(1) $\frac{80}{\sqrt{2}}$ $m\,s^{-1}$ (2) 80 $m\,s^{-1}$ (3) $80\sqrt{2}$ $m\,s^{-1}$ (4) 400 $m\,s^{-1}$ (5) $400\sqrt{2}$ $m\,s^{-1}$

44. வாகன உற்பத்தியாளர் ஒருவர் இரு மேற்பரப்புகளுக்கிடையே உள்ள உராய்வைப் பயன்படுத்தி வாகனங்கள் முன் உள் மேற்பரப்பு மீது ஒரு செல்லிடத் தொலைபேசியை வைத்துக் கொள்வதற்குத் திட்டமிடுகின்ற உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு இவ்வாகனத்தின் முகப்பு உள்மேற்பரப்பு கிடையுடன் 30° கோணத்தை ஆக்குமெனின், தொலைபேசி நழுவுவதைத் தடுப்பதற்குத் தேவையான குறைந்தபட்ச நிலையியல் உராய்வு குணகம் யாது?

(1) $\frac{1}{2}$ (2) $\frac{1}{\sqrt{3}}$

(3) $\frac{\sqrt{3}}{2}$ (4) $\frac{2}{\sqrt{3}}$

(5) $\sqrt{3}$



45. ஒரு றேடார் அன்ரெனா அதன் மையத்தைப் பற்றி 14 $kg\,m^2$ சடத்துவத் திருப்பத்துடன் 30 சுழற்சி/ நிமி வீதம் சுழல்கின்றது. அன்ரெனாவின் இயக்கப்பாட்டுச் சக்தி யாது?

(1) $7\pi^2$ J (2) $14\pi^2$ J (3) $21\pi^2$ J (4) $28\pi^2$ J (5) $49\pi^2$ J

● **46, 47** ஆகிய வினாக்கள் பின்வரும் *ABCD* சுற்று வரிப்படத்தை அடிப்படையாகக் கொண்டவை.



46. *A* இற்கும் *B* இற்குமிடையே உள்ள வோல்ற்றளவு வித்தியாசம் யாது?

(1) 0.50 V (2) 0.75 V (3) 1.20 V (4) 1.40 V (5) 1.50 V

47. 2*R* தடையிக்கும் *R* தடையிக்குமிடையே (*C* இற்கும் *D* இற்குமிடையே) உள்ள வலு விரய விகிதம் யா

(1) 1:1 (2) 2:1 (3) 4:1 (4) 6:1 (5) 8:1

48. ஒரு மனிதன் ஓர் உயர்த்தியில் வைக்கப்பட்டுள்ள தராசு மீது நிற்கின்றான். உயர்த்தி ஓய்வில் உள்ளபே தராசின் வாசிப்பு 50 kg ஆகும். உயர்த்தி 2 $m\,s^{-2}$ ஆர்முடுகலுடன் மேல்நோக்கிச் செல்லும்போது தரா வாசிப்பு யாது?
(g = 10 $m\,s^{-2}$)

(1) 40 kg

(2) 50 kg

(3) 52 kg

(4) 60 kg

(5) 62 kg



CamScanner

49. பேணுயீயின் கோட்பாட்டிற்கேற்ப ஒரு கிடைக் குழாயிற் செல்லும் ஒரு பாய்மத்தின் பாய்ச்சலில் உள்ள பாய்மத் துணிக்கைகள் தொடர்பாகப் பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - ஓர் அருவிக் கோடு வழியே இயங்கும் பாய்மத் துணிக்கைகளின் கதி மாறிலியாகும்.

B - ஓரலகுக் கனவளவில் உள்ள பாய்மத் துணிக்கைகளின் இயக்கப்பாட்டுச் சக்தி $\frac{1}{2}\rho v^2$ ஆகும்.

C - குழாயின் நடு அச்சிற்கும் குழாயின் சுவருக்கும் கிட்டவுள்ள துணிக்கைகளின் கதி மாறுகின்றது.

மேற்குறித்த கூற்றுகளிடையே சரியானது/ சரியானவை

(1) A மாத்திரம்
(2) A, B ஆகியன மாத்திரம்
(3) A, C ஆகியன மாத்திரம்
(4) B, C ஆகியன மாத்திரம்
(5) A, B, C ஆகிய எல்லாம்

50. ஒரு வண்டியில் ஒரு மரச் சில்லின் விட்டம் 1.40 m ஆகும். 30°C வெப்பநிலையில் விட்டம் 1.39 m ஐ உடைய ஓர் உருக்கு வளையம் மரச் சில்லின் வெளியே இருக்குமாறு இடப்படுதல் வேண்டும். உருக்கு வளையத்தை வெப்பமாக்கி விரியச் செய்யலாம். உருக்கின் ஏகபரிமாண (நீட்டல்) விரிவுக் குணகம் $1.2 \times 10^{-5}\,°C^{-1}$ ஆகும். சில்லிற்கு இடப்படத்தக்கவாறு உருக்கு வளையம் வெப்பமாக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச வெப்பநிலை யாது?

(1) 120°C (2) 600°C (3) 630°C (4) 1120°C (5) 1200°C

* * *

CamScanner

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස (උ.පෙළ) විභාගය / க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2024

විෂය අංකය / பாட இலக்கம்: **67**

විෂයය / பாடம்: **தொழினுட்பவியலுக்கான விஞ்ஞான**

ලකුණු දීමේ පටිපාටිය / புள்ளி வழங்கும் திட்டம்
I පත්‍රය / பத்திரம் I

ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.	ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.	ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.	ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.	ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.
01.	1	11.	5	21.	4	31.	2	41.	2
02.	5	12.	5	22.	4	32.	3	42.	3
03.	3	13.	2	23.	4	33.	4	43.	All (out of sly)
04.	1	14.	1	24.	5	34.	4	44.	2
05.	2	15.	1	25.	1	35.	2	45.	1
06.	All (Language)	16.	2	26.	2	36.	2	46.	3
07.	5	17.	1	27.	4	37.	4	47.	5
08.	5	18.	1	28.	4	38.	3	48.	4
09.	4	19.	2	29.	3	39.	5	49.	2
10.	3	20.	4	30.	5	40.	All (out of sly (+) No Answer)	50.	3

- විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு 01 ලකුණු බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் 1 x 50 = 50

(A) தாவரக் கலங்களிலும் விலங்குக் கலங்களிலும் ஒவ்வொன்றுக்கும் ஒரு தனிச்சிறப்பான பல அம்சங்கள் உள்ளன. கீழே தரப்பட்டுள்ள வரிப்படத்தில் மேற்குறித்த கலங்களின் ஒரு வகை காட்டப்பட்டுள்ளது.



(i) மேலே காப்பட்ட கலத்தின் வகை யாது?

தாவரக் கலம்

5 புள்ளிகள்

(ii) நீங்கள் இனங்காண்பதற்கு உதவிய மேற்குறித்த கலத்தின் இரு தனிச்சிறப்பான அம்சங்களை எழுதுக.

(1) பச்சையவுருமணி காணப்படல் கலச்சுவர் காணப்படல்

(2) (பெரிய) புன்வெற்றிடம் காணப்படல்

5 புள்ளிகள் × 2 = 10 புள்ளிகள்

(iii) மேற்குறித்த வரிப்படத்தில் P, Q எனப் பெயரிடப்பட்ட புன்னங்கங்களை இனங்கண்டு, அப்புன்னங்கங்கள் ஒவ்வொன்றினதும் பிரதான தொழிலை எழுதுக.

புன்னங்கம்	புன்னங்கத்தின் பிரதான தொழில்
P: இழைமணி (2 புள்ளிகள்)	சக்தி உற்பத்தி / கலச்சுவாசம்/ ATP உற்பத்தி (3 புள்ளிகள்)
Q: பச்சையவுருமணி (2 புள்ளிகள்)	ஒளித்தொகுப்பு / சூரிய சக்தியை இரசாயனச்சக்தியாக மாற்றல் (3புள்ளிகள்)

புன்னங்கம் இல்லாமல் தொழில் இருந்தால் புள்ளி இல்லை

25

(B) பிரியிழையங்கள், தனி நிலையிழையங்கள் ஆகியன தாவரங்களில் உள்ள இரு அடிப்படை இழைய வகைகளாகும்.

(i) தாவரங்களில் உள்ள தனி நிலையிழையங்களின் மூன்று வகைகளைக் குறிப்பிட்டு, அவ்விழையங்கள் ஒவ்வொன்றினதும் தொழில்களை நிறைவேற்றுவதற்கு அவை காட்டும் ஒவ்வொரு கட்டமைப்பு இசைவாக்கத்தை எழுதுக.

தனி நிலையிழையங்களின் வகை	கட்டமைப்பு இசைவாக்கம்
(1) புடைக்கலவிழையம்	மெல்லிய கலச்சுவர், கலத்திடைவெளிகள் அதிகம்
(2) ஒட்டுக்கலவிழையம்	தடித்த கலச்சுவர், மூலைகளில் தடிப்பு, கலத்திடைவெளிகள் குறைவு
(3) வல்லுருக்கலவிழையம்	இலிக்னினாலான தடித்த கலச்சுவர், கலத்திடைவெளிகள் இல்லை

05 புள்ளிகள் × 6 = 30 புள்ளிகள்

CS CamScanner

(ii) ஓர் இருவித்திலைத் தாவரத்தின் துணை வளர்ச்சிக்குப் பொறுப்பான இரு பிரதான இழைய வகைகளைக் குறிப்பிடுக.

(1) கலன் (கட்டு) மாறிழையம் / காழ் மாறிழையம்

(2) தக்கை மாறிழையம்

5 புள்ளிகள் × 2 = 10 புள்ளிகள் 40

(C) நுண்ணங்கிகள் நைதரசன் வட்டத்தில் ஓர் அத்தியாவசிய வகிபாகத்தைக் கொண்டுள்ளன. நைத்திரோபக்ரர் ஆனது ஓர் இரசாயனத் தற்போசணை நுண்ணங்கியாக நைதரசன் வட்டத்திற்குப் பங்களிப்புச் செய்யும் ஒரு நைதரசன்கொடு பற்றீரியாவாகும். சயனோபற்றீரியா ஆனது ஓர் ஒளித் தற்போசணை நுண்ணங்கியாக நைதரசன் வட்டத்திற்குப் பங்களிப்புச் செய்யும் ஒரு நைதரசன்நாட்டும் பற்றீரியாவாகும்.

(i) இரசாயனத் தற்போசணை நுண்ணங்கியினதும் ஒளித்தற்போசணை நுண்ணங்கியினதும் ஒரு காபன் மூலத்தையும் (source) ஒரு சக்தி மூலத்தையும் குறிப்பிடுக.

நுண்ணங்கி வகுதி	காபன் மூலம்	சக்தி மூலம்
இரசாயனத் தற்போசணி	CO_2/அசேதன காபன்	அசேதன இரசாயனப்பொருட்கள்
ஒளித்தற்போசணி	CO_2/அசேதன காபன்	சூரிய ஒளி / ஒளி

5 புள்ளிகள் × 2 = 10 புள்ளிகள்

5 புள்ளிகள் × 2 = 10 புள்ளிகள்

(ii) கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு பற்றீரியாக் கூட்டத்தினாலும் நைதரசன் வட்டத்தில் நிறைவேற்றப்படும் பிரதான தொழிலை எழுதுக.

பற்றீரியாக் கூட்டம்	நைதரசன் வட்டத்தில் நிறைவேற்றும் பிரதான தொழில்
நைதரசன்நாட்டும் பற்றீரியா	$N_2 \rightarrow NO_3^-$ or $N_2 \rightarrow NH_4^+$
* நைதரசன்கொடு பற்றீரியா	$NH_4^+ \rightarrow NO_2^-$ or $NH_4^+ \rightarrow NO_3^-$ (free marks)
நைதரசனிறக்கும் பற்றீரியா	$NO_3^- \rightarrow N_2$

35

***** இரசாயனப் பதார்த்தங்களை சொற்களில் இருந்தாலும் புள்ளி வழங்குக**

5 புள்ளிகள் × 3= 15 புள்ளிகள்

2. (A) பயன்படுத்தப்பட்ட தாவர எண்ணெயிலிருந்து இலங்கையில் ஓர் இரசாயனக் கைத்தொழில் நிறுவனம் உயிர் டீசலை உற்பத்தி செய்கின்றது. உற்பத்திச் செயன்முறையில் ஓர் ஊக்கியின் முன்னிலையில் தாவர எண்ணெயுடன் மெதனோல் தாக்கம் புரிந்து உயிர் டீசலையும் கிளிசரோலையும் உண்டாக்குகின்றது.

உயிர் டீசல் உற்பத்தியைப் பின்வருமாறு வகைகுறிக்கலாம்.

$$C_3H_5(OCO-R)_3 \;+\; 3CH_3OH \xrightarrow{\text{ஊக்கி}} 3R-COOCH_3 \;+\; C_3H_8O_3$$

(a)	(b)	(c)	(d)

(i) ஒவ்வொரு தாக்கியினதும் விளைபொருளினதும் பெயரை அதற்காகத் தரப்பட்ட (a), (b), (c), (d) என்னும் பெட்டிகளில் எழுதுக.

(a) தாவர எண்ணெய் (எசுத்தர்) / நீண்ட சங்கிலி கொழுப்பமில கிளிசரோல் எசுத்தர் / நீண்ட ... / Trigly...

(b) மெதனோல்

(c) உயிர் டீசல், / கொழுப்பமில மீதைல் எசுத்தர் / FAME/நீண்ட சங்கிலி காபொட்சலிக்கமில மீதையில் எசுத்தர்

(d) கிளசரோல் / கிளிசரின்

3 புள்ளிகள் × 4= 12 புள்ளிகள்

(ii) உயிர்டீசல் உற்பத்தியின்போது உண்டாகும் பிரதான பக்கவிளைபொருளின் கட்டமைப்பை வரைக.



அல்லது

CH_2-OH
$|$
$CH-OH$
$|$
CH_2-OH

8 புள்ளிகள்

(iii) மேற்குறித்த தாக்கத்திற்குக் கைத்தொழில் ரீதியில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் ஓர் ஊக்கியைக் குறிப்பிடுக.

.... NaOH / எரிசோடா (கோஸ்டிக் சோடா) ....

MgO / ZnO / SnO_2

05 புள்ளிகள்

25

(B) கைத்தொழில் வெவ்வேறு நிலைமைகளில் தாக்க வீதத்தைப் பகுப்பாய்வு செய்வதன் மூலம் இச்செயன்முறையை உத்தமமாக்குவதற்கு முயல்கின்றது.

(i) 'தாக்க வீதம்' என்னும் பதத்தை வரையறுக்க.

ஓரலகு நேரத்தில் தாக்கிகளின் செறிவு குறைவடையும் வீதம் / ஓரலகு நேரத்தில் நுகரப்பட்ட தாக்கிகளின் அளவு

அல்லது

ஓரலகு நேரத்தில் விளைவுகளின் செறிவு அதிகரிக்கும் வீதம் / ஓரலகு நேரத்தில் உற்பத்தியாகும் விளைவுகளின் அளவு

05 புள்ளிகள்

(ii) உயிர் டீசல் உற்பத்திச் செயன்முறையில் தாவர எண்ணெய் செலவிடப்படும் வீதத்திற்கும் மெதனோல் செலவிடப்படும் வீதத்திற்குமிடையே உள்ள தொடர்புடைமையை ஒரு சமன்பாட்டினைப் பயன்படுத்தி எடுத்துரைக்க.

தாவர எண்ணெய் நுகர்வு வீதம் $= \frac{1}{3} \times$ **மெதனோல் நுகர்வு வீதம்**

அல்லது

$$\frac{\Delta C(\text{தாவர எண்ணெய்})}{\Delta t} = \frac{1}{3} \times \frac{\Delta C(\text{மெதனோல்})}{\Delta t}$$

(05 புள்ளிகள்)

(iii) இச்செயன்முறையில் தாவர எண்ணெய்க்கும் மெதனோலிற்குமிடையே உள்ள தாக்கத்தின் வீதத்தில் வெப்பநிலை எங்ஙனம் செல்வாக்குச் செலுத்துகின்றதென விவரிக்க.

வெப்பநிலை அதிகரிக்க தாக்கவீதம் அதிகரிக்கும்
அல்லது
வெப்பநிலை குறைவடைய தாக்கவீதம் குறைவடையும்

5 புள்ளிகள்

(iv) தாவர எண்ணெய்க்கும் மெதனோலிற்குமிடையே உள்ள தாக்கம் பல படிகளாக நடைபெறுகின்றது. 'ஒற்றைப் படித் தாக்கம்', 'பல்படித் தாக்கம்' என்பவற்றினால் கருதப்படுபவற்றை விளக்குக.

ஒற்றைப்படித் தாக்கம் : தாக்கிகள் ஒரு படியில் விளைவுகளாக மாற்றப்படும்
பல்படித் தாக்கம் : தாக்கிகள் பல படிகளில் விளைவுகளாக மாற்றப்படும்.

(**5 புள்ளிகள்** x2) = 10 புள்ளிகள்

(v) 'வீதம் துணியும் படி' என்னும் எண்ணக்கருவையும் அது ஒட்டுமொத்தத் தாக்க வீதத்தில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தையும் விளக்குக.

பல்படி இரசாயனத் தாக்கத்தில் மெதுவாக நடைபெறும் தாக்கமாகும்.
அல்லது
தாக்கம் நிறைவுபெற மிக நீண்ட நேரம் எடுக்கும் தாக்கப்படியாகும்.
அல்லது
உயர் (கூடிய) ஏவற்சக்தி உடைய தாக்கப்படியாகும்

5 புள்ளிகள்

ஒட்டுமொத்த தாக்க வீதத்தினை கட்டுப்படுத்தும் / தீர்மானிக்கும்.

5 புள்ளிகள்

35

(C) தாவர எண்ணெய்க்கும் மெதனோலிற்குமிடையே உள்ள தாக்கத்தின் தாக்க வெப்பம் $-45\ \text{kJ mol}^{-1}$ ஆகும்.

(i) 'தாக்க வெப்பம்' என்னும் பதத்தை வரையறுக்க.

இரசாயனத் தாக்கமொன்றில் உறிஞ்சப்படும் அல்லது விடுவிக்கப்படும் வெப்பத்தின் (சக்தியின்) அளவாகும்.
அல்லது.
இரசாயனத் தாக்கமொன்றில் வெப்ப உள்ளுறை மாற்றமாகும்.

5 புள்ளிகள்

(ii) இத்தாக்கம் புறவெப்பத் தாக்கமா, அகவெப்பத் தாக்கமா?

புறவெப்பத்தாக்கம்

5 புள்ளிகள்

CamScanner

ஒரு தடவை உயிர் டீசல் உற்பத்திக்காக மிகையான தாவர எண்ணெயுடன் 500 g மெதனோல் பயன்படுத்தப்பட்டது. மெதனோலின் மூலர்த் திணிவு 32 g mol^{-1} ஆகும்.

(iii) இத்தாக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்ட மெதனோலின் மூல்களின் எண்ணிக்கையைக் கணிக்க.

மூல்களின் எண்ணிக்கை $= \dfrac{\text{எதனோலின் திணிவு}}{\text{எதனோலின் மூலர்திணிவு}} = \dfrac{500\text{ g}}{32\text{ g mol}^{-1}}$

5 புள்ளிகள்

= 15.625 (mol) OR 15.63 (mol)

5 புள்ளிகள்

(iv) தாக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்ட மெதனோல் மூல்களின் எண்ணிக்கையை அடிப்படையாக கொண்டு இத்தாக்கத்துடன் தொடர்புபட்ட மொத்த வெப்ப மாற்றத்தைக் கணிக்க.

ஒரு மூல் உயிர்டீசல் உற்பத்தியானது -45 kJ இனைத் தரும் (தாக்கவெப்பம் -45 kJ/ mol)

ஒரு மூல் மெதனோல் தாக்கமடையும்போது -45 kJ உற்பத்தியாகிறது.

05 புள்ளிகள்

ஒவ்வொரு மூல் எதனோலும் ஒரு மூல் உயிர்டீசலை உற்பத்தியாக்கும். (அடுத்த படிமுறையில், மாணவர் மெதனோலின் மூல் எண்ணிக்கையைப் பயன்படுத்தி தாக்கமுற்ற மொத்த சக்தியைக் கணிப்பதற்கு 05 புள்ளிகளை வழங்குக.

05 புள்ளிகள்

உற்பத்தியாகிய மொத்த (வெப்ப) சக்தி = 45 kJ/ mol × 15.625 mol

05 புள்ளிகள்

~~= 702.9 kJ – 703.35 kJ~~

05 புள்ளிகள்

3. (A) ஓர் உயிர்த்தாக்கியைப் பயன்படுத்திக் கரும்புப் பாகிலிருந்து உயிரெதனோலை உற்பத்தி செய்வதற்கு மாணவர் குழு ஒன்று உத்தேசித்துள்ளது. மூலப்பொருட் கலவையைத் தயாரித்தல், ஒரு நுண்ணங்கியைப் பயன்படுத்தி நொதிக்கச் செய்தல், காய்ச்சி வடித்தல் ஆகியன இச்செயன்முறையின் அடிப்படைப் படிமுறைகளாகும். உயிர்த்தாக்கியில் ஒரு மின்வெப்பமாக்கி உள்ளது.

(i) கரும்புப் பாகில் அடங்கும் பிரதான காபோவைதரேற்று யாது?

சுக்குரோசு

05 புள்ளிகள்

(ii) கரும்புப் பாகில் அடங்கும் மேற்குறித்த பிரதான காபோவைதரேற்று எந்தக் காபோவைதரேற்றுக் கூட்டத்திற்கு உரியது?

இருசக்கரைட்டு

05 புள்ளிகள்

(iii) நொதித்தற் செயன்முறைக்குப் பயன்படுத்தப்படும் நுண்ணங்கி 35°C இல் நன்றாக வளர்கின்றது. உயிர்த்தாக்கியிற் பயன்படுத்தப்படும் வெப்பமாக்கியின் வலு 1000 W எனின், மூலப்பொருட் கலவையின் வெப்பநிலையை 25°C இலிருந்து 35°C இற்கு உயர்த்துவதற்கு எடுக்கும் குறைந்தபட்ச நேரம் யாது?
(மூலப்பொருட் கலவையின் தன்வெப்பக் கொள்ளளவு, அடர்த்தி, கனவளவு ஆகியன முறையே 4300 J kg^{-1} °C^{-1}, 1.15 kg L^{-1}, 10 L ஆகும்.)

கலவையின் திணிவு = கனவளவு × அடர்த்தி = 10 L × 1.15 kg L^{-1}

05 புள்ளிகள்

= 11.5 kg

05 புள்ளிகள்

Q = mcΔθ OR P × t = mcΔθ
1000 W x t = 11.5 kg x 4300 J kg^{-1} °C^{-1} x (35-25) °C

05 புள்ளிகள்

t = 494.5 s **அல்லது** 8 min and 24.5 s

(04 + 01) புள்ளிகள்

(B) உள்ளே இருக்கும் அமுக்கத்தைக் கண்காணிப்பதற்கு உயிர்த்தாக்கியுடன் ஒரு U-குழாய் மெலிமானி (manometer) பின்வரும் உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு தொடுக்கப்பட்டுள்ளது. மெலிமானியின் ஒரு புயம் வளிமண்டலத்திற்குத் திறந்திருக்கும் அதேவேளை மற்றைய புயம் உயிர்த்தாக்கிக்குத் திறந்துள்ளது. வலக் கைப் புயத்தில் உள்ள இரச நிரலின் உயரம் 62 cm ஆகவும் இடக் கைப் புயத்தில் உள்ள இரச நிரலின் உயரம் 60 cm ஆகவும் இருக்கும்போது தாக்கியின் உள் அமுக்கத்தை விடுவிக்குமாறு ஓர் அமுக்க ஒழுங்காக்கும் வால்வு தாக்கியுடன் தொடுக்கப்பட்டுள்ளது. வளிமண்டல அமுக்கம் 10^5 Pa ஆகும்.
(இரசத்தின் அடர்த்தி 13 600 kg m^{-3}, $g = 10$ m s^{-2}.)



(i) அமுக்கத்தை விடுவிப்பதற்கு அமுக்க ஒழுங்காக்கும் வால்வு திறக்கும்போது உயிர்த்தாக்கியில் உள்ள குறைந்தபட்ச உள் அமுக்கத்தை Pa இற் கணிக்க.

$p = h\rho g + p_0$
$p = 2 \times 10^{-2}\text{m} \times 13600\ \text{kg m}^{-3}\ 10\ \text{m s}^{-2} + P_0$

05 புள்ளிகள்

$p = 2720\ \text{Pa} + p_0 = 2720\ \text{N m}^{-2} + 10^5\ \text{Pa} = 102720\ (\text{Pa})$

05 புள்ளிகள்

(ii) எதனோலைத் தொகுப்பதற்கு இரசாயன முறைகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக உயிரிரசாயன முறைகளைப் பயன்படுத்துவதன் இரு அனுகூலங்களை எழுதுக.

உயர் விளைதிறன்
உற்பத்திச் செலவு குறைவு
சூழல் பாதிப்பு குறைவு

05 ×2 = 10 புள்ளிகள்

(iii) உயிரெதனோலின் உற்பத்திச் செயன்முறைக்குப் பயன்படுத்தப்படும் நுண்ணங்கியின் விஞ்ஞானப் பெயரை எழுதுக.

Saccharomyces cerevisiae
முதலெழுத்து ஆங்கில பெரிய எழுத்து, ஏனையவை ஆங்கில சிறிய எழுத்துகள். அடிக்கோடு இடல் அவசியம் விஞ்ஞானப் பெயரீட்டில் ஆங்கில எழுத்துக்கள் சரியாதல் வேண்டும்

05 புள்ளிகள்

(iv) உற்பத்திச் செயன்முறைக்குப் பயன்படுத்தும்போது மேற்குறித்த (iii) இல் குறிப்பிட்ட நுண்ணங்கி சுவாசிக்கும் பிரதான சுவாச முறை யாது?

அமையத்துக்கேற்ற காற்றின்றிவாழி

05 புள்ளிகள்

அமையத்திற்கேற்ப காற்றின்றி வாழ்

(v) நுண்ணங்கியில் உள்ள நொதியங்களின் மூலம் காபோவைதரேற்று எதனோலாக மாற்றப்படுகின்றது. நொதியங்கள் எவ்வகை உயிர்மூலக்கூறுகளுக்கு உரியவையாகும்?

புரதம்

05 புள்ளிகள்

(vi) ஒரு நொதியத்தின் தொழிற்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் மூன்று காரணிகளை எழுதுக,

வெப்பநிலை / pH / கீழ்ப்படைச் செறிவு / நொதியச் செறிவு / துணைக்காரணிகள் / உப்புச்செறிவு

05 ×3 = 15 புள்ளிகள்

CS CamScanner

நொதித்தலின் இறுதியில் கிடைக்கும் கலவையில் எதனோலும் நீரும் அடங்குகின்றன. உண்டாகிய எதனோலைக் காய்ச்சி வடித்து அகற்றுவதற்குக் கலவை 79°C வரை வெப்பமாக்கப்பட்டது. 79°C இல் எதனோல் கொதிக்கத் தொடங்கிய அதேவேளை கொதித்தல் 50 நிமிடத்திற்கு நடைபெற்றது.

(vii) இந்நேரத்தில் திரவ எதனோல் ஆவியாதல் 79°C இல் நடைபெறுகையில் எதனோலின் மூலம் பெறப்பட்ட சக்தியின் அளவைக் கணிக்க. தாக்கியிற் பயன்படுத்தப்படும் வெப்பமாக்கியின் வலு 1000 W ஆகும்.

$Q = P \times t$

$Q = 1000\ W \times (50 \times 60)\ s$

05 புள்ளிகள்

Q = 3,000,000 J OR 3,000 kJ OR 3 MJ

(04 + 01) புள்ளிகள்

(viii) இச்செயன்முறையில் ஆவியாகிய எதனோலின் திணிவை kg இற் கணிக்க. எதனோலின் ஆவியாக்கலின் மறை வெப்பம் 855 kJ kg^{-1} ஆகும். (வெப்பமாக்கியின் மூலம் காலப்பட்ட முழு வெப்பமும் எதனோலை ஆவியாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டதெனக் கொள்க.)

Q = mL

3000000 J = m × 855 kJ/ kg

05 புள்ளிகள்

m = 3.51 (kg) (3.50 – 3.51 kg)

05 புள்ளிகள்

4. (A) ஒரு நீர் மாதிரியின் கடத்தாறை அறிந்திருத்தல் நீரின் பல இயல்புகளைத் துணிவதற்கு உதவும். நீரில் அமிழ்த்துவதன் மூலம் நீரின் தடையை அளப்பதற்கு மாணவன் ஒருவன் பின்வரும் உபகரணத்தை அமைத்தான். உபகரணத்தின் கனவளவும் திணிவும் முறையே 1500 cm^3, 1.2 kg ஆகும். (நீரின் அடர்த்தி 1000 kg m^{-3} , புவியீர்ப்பினாலான ஆர்முடுகல் 10 m s^{-2} ஆகும்.)



(i) ஓர் உகந்த கணிப்பின் மூலம், மேற்குறித்த உபகரணம் நீரில் மிதக்கின்றதெனக் காட்டுக.

$\uparrow F = v\rho g - mg$

$\uparrow F = (1500 \times 10^{-6} m^3 \times 1000\ kg\ m^{-3} \times 10\ m\ s^{-2}) - (1.2\ kg \times 10\ m\ s^{-2})$

05 புள்ளிகள்

$\uparrow$ F = 3 N OR $v\rho g > mg$

05 புள்ளிகள்

கணிக்கப்பட்ட விசையிலிருந்து நீரில் அமிழ்ந்த உபகரணமானது நேராக(நிலைக்குத்தாக) மேல்நோக்கி இருப்பதனால் உபகரணம் மிதக்கும் என்று அர்த்தப்படும்.

05 புள்ளிகள்

***** பொருளின் அடர்த்தியானது கணிக்கப்பட முடியும். பொருளின் அடர்த்தியானது நீரை விட குறைவாக இருந்தால் பொருள் மிதப்பதாக கருதப்படும்.**

CamScanner

(ii) மேற்குறித்த உபகரணம் அசையாத நீரில் மிதக்கும்போது அதன் மீது தாக்கும் விசைகளைப் பின்வரும் வரிப்படத்திற் குறிக்க.





மேலுதைப்பைச் / மிதத்தலைச் சுட்டிக்காட்டல் **05 புள்ளிகள்**

நிறையைச் சுட்டிக்காட்டல் **05 புள்ளிகள்**

(இரண்டு விசைகளும் புவியீர்ப்பு மையத்திலிருந்து ஒரே நிலைக்குத்து அச்சுக்கோட்டில் இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாமல் விசைகள் சரியாயின் 05 புள்ளிகள் மட்டும் வழங்குக)

(iii) வெவ்வேறு ஆழங்களில் நீரின் கடத்தாறை அளப்பதற்கு மேற்குறித்த உபகரணம் நீரில் முற்றாக அமிழ்த்தப்பட வேண்டும். உபகரணம் நீரில் முற்றாக அமிழ்த்தப்படுவதற்கு அதன் வெறும் வெளியில் வைக்கப்பட வேண்டிய குறைந்தபட்சத் திணிவை kg இற் கணிக்க.

$U = ma$
$3\ N = m\ g$

05 புள்ளிகள்

$= 0.3$ (kg) OR அலகுகள் அவசியம் இல்லை

05 புள்ளிகள்

(B) வெறும் வெளியில் 1 kg திணிவை வைத்து இவ்வுபகரணம் ஒரு கயிற்றில் முடிச்சிடப்பட்டு ஓர் ஆற்றில் முழுமையாக அமிழ்த்தப்பட்டது. நீரோட்டத்தின் மூலம் உபகரணத்தின் மீது பிரயோகிக்கப்படும் விசையின் விளைவாகக் கயிறு உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு நிலைக்குத்துடன் 30° கோணத்தை ஆக்குகின்றது.

(i) உபகரணம் ஆற்றில் முழுமையாக அமிழ்த்தப்பட்டிருக்கும்போது அதன் மீது தாக்கும் விசைகளை பின்வரும் உருவில் குறிப்பிடுக.



ஆற்று நீரினால் ஏற்படுத்தப்படும் விசையை சுட்டிக்காட்டல் **(05 புள்ளிகள்)**
இழுவிசை **(05 புள்ளிகள்)**
மேலுதைப்பு / மிதப்பு விசையைச் சுட்டிக்காட்டல் **(05 புள்ளிகள்)**
நிறையைச் சுட்டிக்காட்டல் **(05 புள்ளிகள்)**
***ஓர் இடத்திலிருந்து விசைகள் சுட்டிக்காட்டப்பட வேண்டிய அவசியம் இல்லை

(ii) நீரோட்டத்தின் மூலம் இவ்வுபகரணத்தின் மீது பிரயோகிக்கப்படும் விசையைக் கணிக்க.

$\uparrow, \rightarrow F_{buoyancy} + T\cos 30 = mg$ OR $T\cos\theta + U = mg$

(05 புள்ளிகள்)

$T\cos 30 = (2.2 \times 10\ N) - (15\ N) = 7\ N$

$T = \frac{14}{\sqrt{3}}$

$T\sin 30 = F$

(05 புள்ளிகள்)

$F = \frac{7}{\sqrt{3}}$ N OR 4.04 N

(05 புள்ளிகள்)

35

(C) தடைத்திறனை அடிப்படையாகக் கொண்டு, செறிவு அறியப்பட்ட ஓர் உப்புக் கரைசலின் கடத்தாறைப் பின்வரும் சமன்பாட்டினைப் பயன்படுத்திக் கணிக்கலாம்.

$$\text{கடத்தாறு} = \frac{1}{\text{தடைத்திறன்}}$$

(i) தடைத்திறனின் அலகை அடிப்படையாகக் கொண்டு கடத்தாறின் அலகைப் பெற்றுப் பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

தடைத்திறனின் அலகு	கடத்தாறின் அலகு
Ω m	Ω^{-1} m^{-1}

(5 புள்ளிகள்)

(ii) கீழே தரப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி உப்புச் செறிவுக்கு எதிரே கடத்தாறின் வரைபைத் தரப்பட்ட ஆள்கூற்றுத் தளத்தின் மீது வரைக.

உப்புச் செறிவு (mg L^{-1})	தடைத்திறன் (MΩ m)	$\frac{1}{\text{தடைத்திறன்}}$
600	6.2	0.16
800	3.3	0.30
1000	2.2	0.45
1200	1.7	0.58
1400	1.3	0.76



ஐந்து புள்ளிகளைச் சுட்டிக்காட்டல் **(02 × 5= 10 புள்ளிகள்)**
வரைபுக்குரிய நேர் கோட்டை வரைதல் **(05 புள்ளிகள்)**

(iii) உபகரணத்தைப் பயன்படுத்தி ஒரு குறித்த ஆழத்தில் அளக்கப்பட்ட ஆற்று நீரின் தடைத்திறன் 4.3 MΩ m ஆகும். வரையப்பட்ட வரைபைக் கொண்டு அந்த ஆழத்தில் ஆற்று நீரின் கடத்தாறைக் கணிக்க.

0.23 ohm^{-1} m^{-1}

free (5 புள்ளிகள்)

****** அனைத்து மாணவர்களுக்கும் புள்ளி வழங்குக.**

(iv) வரைபைக் கொண்டு அந்த ஆழத்தில் ஆற்று நீரின் உப்புச் செறிவைக் கணிக்க.

746 mg L^{-1}

free (5 புள்ளிகள்)

****** அனைத்து மாணவர்களுக்கும் புள்ளி வழங்குக.**

30

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2024
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2024
General Certificate of Education (Adv. Level) Examination, 2024

තාක්ෂණවේදය සඳහා විද්‍යාව II
தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் II
Science for Technology II

கட்டுரை

67 T II

அறிவுறுத்தல்கள் :
- ※ **B, C, D** ஆகிய பகுதிகள் ஒவ்வொன்றிலுமிருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவையேனும் தெரிவுசெய்து நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ※ ஒவ்வொரு வினாவுக்கும் **150** புள்ளிகள் வழங்கப்படும்.
- ※ இவ்வினாத்தாளுடன் பகுதி **B** இலுள்ள வினா இல. **5** இற்குத் தேவையான வரைபுத் தாள் வழங்கப்பட்டுள்ளது.
- ※ செய்நிரலாக்கத்தகாத **(Non-programmable)** கணிப்பான்களைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும்.

பகுதி B - கட்டுரை

2024 பரீஸ் ஒலிம்பிக் போட்டிகளின் ஒழுங்கமைப்பாளர்கள் மகளிருக்கான 100 m எதேச்சைப் பாணி நீச்சல் நிகழ்வின் அடிப்படைச் சுற்றில் ஒவ்வொரு நீச்சல் வீராங்கனையும் தனது நிகழ்ச்சியை முடித்த நேரங்களைக் கிட்டிய முதலாம் தசம தானத்திற்கு மட்டந்தட்டிய தரவுகளாகச் சேகரித்துள்ளனர். இந்நிகழ்வின் போட்டித்தன்மையை விளங்கிக்கொள்வதற்காக ஒழுங்கமைப்பாளர்கள் இந்நேரப் பரம்பலைப் பகுப்பாய்வு செய்ய வேண்டியுள்ளது. 25 வீராங்கனைகள் தமது நிகழ்வை முடிப்பதற்கு எடுத்த நேரங்களின் மீடிறன் பரம்பல் **அட்டவணை 1** இற் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 1 : மகளிருக்கான 100 m எதேச்சைப் பாணி நீச்சல் நிகழ்வுக்கு எடுத்த நேரங்களின் மீடிறன் பரம்பல்

நேர ஆயிடை (செக்கன்)	நீச்சல் வீராங்கனைகளின் எண்ணிக்கை
52.0 – 52.9	3
53.0 – 53.9	7
54.0 – 54.9	5
55.0 – 55.9	3
56.0 – 56.9	2
57.0 – 57.9	2
58.0 – 58.9	3
மொத்தம்	**25**

(*a*) (i) கீழே தரப்பட்டுள்ள **அட்டவணை 2** ஐ உங்கள் விடைத்தாளிற் பிரதிசெய்து, வகுப்பு வரைப்பாடு, வகுப்புப் புள்ளி, அதிகரிக்கும் திரள் மீடிறன், அதிகரிக்கும் சதவீதத் திரள் மீடிறன் என்னும் நிரல்களைப் பூரணப்படுத்துக.

அட்டவணை **2** : நீச்சல் நேரத்திற்கான திரள் மீடிறன் பரம்பல்

வகுப்பு ஆயிடைகள் (செக்கன்)	நீச்சல் வீராங்கனைகளின் எண்ணிக்கை (மீடிறன்)	வகுப்பு வரைப்பாடு	வகுப்புப் புள்ளி	அதிகரிக்கும் திரள் மீடிறன்	அதிகரிக்கும் சதவீதத் திரள் மீடிறன்
52.0 – 52.9	3				
53.0 – 53.9	7				
54.0 – 54.9	5				
55.0 – 55.9	3				
56.0 – 56.9	2				
57.0 – 57.9	2				
58.0 – 58.9	3				

